**செய்தி வெளியீடு எண்:1212** **நாள்:26.11.2021**

# <u>செய்தி வெளியீடு</u>

இந்திய உச்சநீதிமன்றத்தின் தன்னிச்சை நீதிப்பேராணை (உரிமையியல்) வழக்கு எண். 3/2020, நாள் 23.03.2020, 27.04.2021 மற்றும் 23.09.2021–இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், சான்றுறுதி அலுவலர்களிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்களை பரிசிலனை செய்ததில், சான்றுறுதி அலுவலர்கள் தங்களது தொழிற் சான்றிதழினை ஆறு மாத காலத்திற்கு முன்னதாக புதுப்பிக்க தவறியவர்கள் மற்றும் புதுப்பிப்பதற்காண விண்ணப்பமானது கால தாமதமாக பெறப்பட்டு, நிராகரிக்கப்பட்டவர்கள், தொழிற்சான்றிதழினை புதுப்பித்தலிற்காக விண்ணப்பிக்க வேண்டிய காலக்கெடு 10.03.2020 முதல் 02.10.2021 வரையிலான கால வரம்பிற்குள் இருப்பின், அவர்கள் தங்களின் தொழிற் சான்றிதழை புதுப்பித்திடும் பொருட்டு, அஞ்சல் மூலம் அரசு செயலாளர் (சட்ட விவகாரங்கள்), சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 என்ற முகவரிக்கு உரிய ஆவணங்கள் மற்றும் கட்டணத்துடன் <u>01.02.2022 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ</u> விண்ணப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**